**தலைப்பு 246 - உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 246 - உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 22 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்**

---

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 4,476.05 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 4,437.13 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 38.92 மில்லியன் அதாவது 0.87 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 2,440.00 | 2,428.41 | 11.59 | 0.48 |
| மூலதனம் | 2,036.05 | 2,008.72 | 27.33 | 1.34 |
| மொத்தம் | 4,476.05 | 4,437.13 | 38.92 | 0.87 |

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

திணைக்களத்தால் 2015 ஆம் அண்டிற்காக 29 வருமானக் குறியீடுகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 537,050.00 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் கூட்டுமொத்தமாக ரூபா 524,834.20 மில்லியன் வருமானம் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | ஆரம்ப வருமானத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையேயுள்ள முரண்கள் அதிகரிப்பு /(குறைவு) | அதிகரிப்பு /(குறைவு) திருத்தப்பட்ட மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 10.02.01.01 | 35,000.00 | 30,000.00 | 27,896.35 | (2,103.65) | (7.0) |
| 10.02.01.02 | 85,000.00 | 75,000.00 | 73,719.68 | (1,280.32) | (1.7) |
| 10.02.01.03 | 40,000.00 | 35,000.00 | 28,894.52 | (6,105.48) | (17.4) |
| 10.02.01.04 | 136,000.00 | 90,000.00 | 83,726.43 | (6,273.57) | (6.9) |
| 10.02.02.01 | - | - | 0.62 | 0.62 | 100.0 |
| 10.02.02.02 | - | - | 0.26 | 0.26 | 100.0 |
| 10.02.02.03 | - | - | 0.0 | 00 | 100.0 |
| 10.02.03.01 | - | - | 11.63 | 11.63 | 100.0 |
| 10.02.03.02 | - | - | - | - | - |
| 10.02.03.03 | - | - | - | - | - |
| 10.02.08.00 | - | - | - | - | - |
| 10.02.09.00 | - | - | 15.77 | 15.77 | 100.0 |
| 10.03.03.00 | 8,000.00 | 2,200.00 | 831.92 | (1,368.08) | (62.2) |
| 10.03.04.00 | 2,500.00 | 2,300.00 | 1,394.92 | (905.08) | (39.4) |
| 10.03.05.00 | 1,300.00 | 1,200.00 | 753.31 | (446.69) | (39.4) |
| 10.02.12.01 | 22,000.00 | 20,000.00 | 21,243.98 | 1,243.98 | 6.2 |
| 10.02.12.02 | 10,600.00 | 10,000.00 | 6,800.01 | (3,199.99) | (32.0) |
| 10.02.12.03 | 18,000.00 | 18,000.00 | 15,894.77 | (2,105.23) | (11.7) |
| 10.04.01.02 | 15,000,00 | 11,000.00 | 12,339.85 | 1,339.85 | 12.2 |
| 10.04.04.00 | 8,000.00 | 6,500.00 | 6,148.45 | (351.55) | (5.4) |
| 10.04.01.01 | 145,000.00 | 130,000.00 | 139,395.47 | 9,395.47 | 7.2 |
| 10.04.02.01 | 32,000.00 | 24,000.00 | 26,205.53 | 2,205.53 | 9.2 |
| 10.04.03.01 | 95,000.00 | 64,000.00 | 62,411.59 | (1,588.41) | (2.5) |
| 10.04.03.99 | 500.00 | 300.00 | 492.47 | 192.47 | 64.2 |
| 10.02.01.02 | 15,000.00 | 14,800.00 | 11,454.39 | (3,345.61) | (22.6) |
| 10.04.01.03 | 100.00 | 2,000.00 | 4,135.64 | 2,135.64 | 106.8 |
| 10.06.03.00 | - | - | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10.03.09.00 | 1,000.00 | 750.00 | 1,066.64 | 316.64 | 42.2 |
| 10.02.07.00 | - | - | - | - | - |
| **மொத்தம்** | **670,000.00** | **537,050.00** | **524,834.20** | **(12,215.80)** | **(2.27)** |

### 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 24601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 105.00 | 82.07 | 60.00 | 78.15 | 360.00 | 321.37 |

### 2.4 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0069/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 522.79 மில்லியன் ஆகும்.

### 2.5 பொது வைப்புக் கணக்குகள்

திணைக்களத்தின் கீழ் வருகின்ற 07 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,035.73 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0039/000 | 0.45 |
| 6000/0000/00/0002/0052/000 | 0.60 |
| 6000/0000/00/0006/0085/000 | 12.56 |
| 6000/0000/00/0016/0004/000 | 56.45 |
| 6000/0000/00/0018/0005/000 | 0.14 |
| 6000/0000/00/0019/0010/000 | 0.03 |
| 6000/0000/00/0014/0003/000 | 965.50 |
| மொத்தம் | 1,035.73 |

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 கட்டுநிதிக் கணக்கு

2013 மற்றும் 2014 ஆண்டுகள் முதல் கொண்டுவரப்படுகின்ற முறையே ரூபா 1.40 மில்லியன் மற்றும் ரூபா 1.44 மில்லியனாக கூட்டுமொத்தமாக ரூபா 2.84 மில்லியன் கட்டுநிதி மீதிகள் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பொது வைப்புக் கணக்கு

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கட்டிடத்தை நவீனமயப்படுத்தும் ஒப்பந்தம் 2009 ஆம் ஆண்டின் போது அரசாங்க கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தம் தாமதித்து பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் 2015 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 1,341,448 தொகையான தாமதக் கட்டணம் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்காது 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.3 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவருக்கு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 29 வருமானக் குறியீடுகளினது வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிப் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அந்த வருமானக் குறியீடுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானம் ரூபா 670,000 மில்லியன் ஆக ஆரம்ப மதிப்பீடுகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வருமானத்தை சேகரிப்பதற்கு பதிலாக சேகரிக்கக்கூடிய வருமானத்திற்கு நேரொத்த வகையில் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 537,050 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வரி அறிக்கையை பரீட்சித்த போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 259,528 மில்லியன் தொகையான வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது. 29 வருமானக் கணக்குகளின் டீ.ஜீ.எஸ்.ஏ வருமானம் - 2 படிவத்தின் தொடர் இலக்கம் 8 முதல் 14 வரையுள்ள நிலுவை வருமானம் தொடர்பான விபரங்கள் எதுவும் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. அந்த நிலுவை வரி மற்றும் தண்டப் பணங்களில் ரூபா 33,723 மில்லியன் அதாவது மொத்த நிலுவையில் 13 சதவீத அளவொன்றை அறவிட முடியுமாக இருந்ததாகவும் எஞ்சிய ரூபா 225,805 மில்லியன் அதாவது மொத்த நிலுவையில் 87 சதவீதமான நிலுவை வரி மற்றும் தண்டப்பணத்தை அறவிடல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்ததாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறு அறவிடல் தற்காலிகமாக

கைவிடப்பட்டமைக்கு தாக்கமளித்த காரணங்கள் மற்றும் சில நிலுவை வரி மீதிகள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| அறவீடுகள் தற்காலிகமாக கைவிடப்பட்டமைக்கு தாக்கமளித்த காரணங்கள் | நிலுவை வரி மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| வரி முறையீடு | 89,737 |
| எதிர்ப்புத் தெரிவித்தமை | 18,292 |
| கணனி முறைமையில் வழுக்களாக காண்பித்தமை | 18,683 |
| மீளச் செலுத்த வேண்டிய மீதி காணப்பட்டமை | 12,686 |
| நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை | 2,235 |

(ii) நிலுவை வரி அறிக்கைக்குரிய தனிப்பட்ட மீதிப் பட்டியல்களை பரீட்சித்த போது வாடகையாளரினால் மதிப்பீட்டாளரை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்வதற்கு இணங்கியிருந்த வரித் தொகை தொடர்பாக வரியிறுப்பாளர்களினால் எதிர்ப்பினைக் காண்பித்தமையின் காரணமாக, பெறுமதிசேர் வரி, வருமான வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி போன்ற 03 வரி வகைகளுக்குரிய ரூபா 3,885.86 மில்லியன் தொகையினை அறவிடுதல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது.

கைவிடப்பட்ட வரியை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் 41(1) ஆம் பிரிவின் பிரகாரம் வாடகையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டியிருந்ததுடன் செல்லுபடியான முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்படவில்லையாயின் இதனை அறவிடல் தொடர்பாக எதிர்பினைச் சமர்ப்பிப்பதற்கு அதிகாரச்சட்டத்தின் 41(2) ஆம் பிரிவின் பிரகாரம் வரியிறுப்பாளருக்கு முடியும். எனினும் அந்த எதிர்ப்பு தொடர்பாக ஆணையாளர் நாயகத்தினால் இறுதித் தீர்வு வழங்கப்பட வேண்டியிருந்ததுடன் அவ்வாறான தீர்வொன்றை ஆணையாளர் நாயகத்தினால் வழங்குதலோ அல்லது நிலுவை மீதியை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மேற்கூறப்பட்ட ரூபா 3,885.84 மில்லியன் தொகையான நிலுவை மீதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொருட்கள், சேவைகள் அடிப்படையிலான நிலுவை வரி ரூபா 1,966 மில்லியனுக்காக காலப்பகுப்பாய்வொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த நிலுவை வரி மீதிக்கான விபரங்கள் ஏடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(iv) இரத்துச் செய்யப்பட்ட வரி அதிகாரச்சட்டத்தின் 08 இற்குரிய மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 8,694 மில்லியன் நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 8,134 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(v) அமைச்சின் ஆலோசனைக் குழுவினால் அரச நிறுவனங்களிலிருந்து அறவிட வேண்டிய நிலுவை வரியை அறவிடுவதற்காக அசாதாரண காலஎல்லை வழங்கப்பட்டிருந்தது. உதாரணமாக ஒரு அரச நிறுவனமொன்றின் நிலுவை வரித்தொகை 1,965 மாதாந்த தவணைகளில் அதாவது 163 வருடங்களில் செலுத்தித் தீர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

(இ) 10.02.01.00 ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் பெறுமதிசேர் வரிக்கட்டுப்பாட்டுக் கணக்கில் திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் வருமானத்தை விட திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் வருமானம் ரூபா 203.70 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த வேறுபாட்டிற்குரிய காரணத்தை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்காது அந்தத் தொகை 10.02.01.02 ஆம் வருமானக் குறியீட்டின் கீழ் வரும் வருமானத்தின் மீளச் செலுத்தலாக (Refund) கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டின் போது அவ்வாறு கழிக்கப்பட்ட தொகை ரூபா 12.36 ஆக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் பாதீட்டு உத்தேசத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2015 இன் 10 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் மூலம் ஆடம்பர நலன்வரி, கசினோ தொழில் வருமான வரி, மண்டப வரி மற்றும் குடியகழ்வு வரி என புதிய 04 வரி வருமானங்களைச் சேகரிப்பதற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆடம்பர நலன் வரியில் ரூபா 47,360.61 மில்லியன் தொகையைச் சேகரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், ஏனைய 03 வரி வகைகளுக்குரிய செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

(i) 2015 ஜனவரி 29 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் அத்திகதியில் உள்ளவாறு பதிவு செய்துள்ள 04 கசினோ வியாபாரங்களிலிருந்து ஒருவரிடமிருந்து ரூபா 1,000 மில்லியன் வீதம் ரூபா 4,000 மில்லியன் கசினோ தொழில் வருமானவரி சேகரிக்கப்படவேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 80 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) 2015 ஏப்ரல் 01 ஆந் திகதி அல்லது அத்திகதியின் பின்னர் ஆரம்பமாகும் சகல வருடங்களுக்காகவும் 2000 ஏப்ரல் 01 ஆந் திகதி அல்லது அதன் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட மண்டபமொன்றின் சகல உரிமையாளர்களிடமிருந்தும் ரூபா ஒரு மில்லியன் மண்டப வரியொன்று அறவிட வேண்டியிருந்த போதிலும், அதிகாரச்சட்டத்தின் 25(4) உபபிரிவின் பிரகாரம், அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்குரிய கட்டளை தயாரிக்கப்படாதிருந்தமையால் மீளாய்வாண்டின் போது அறவீடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(iii) 2015 நவம்பர் 01 ஆந் திகதி முதல் அமுல்படும் வகையில் நிரந்தரமாக நாட்டிலிருந்து வெளியே செல்லும் சகல இலங்கைப் பிரஜைகளிடமிருந்து அந்த பிரஜைக்கு நாட்டிலிருந்து வெளியே கொண்டு செல்வதற்காக விடுவிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாற்றின் அடிப்படையில் இருபது சதவீத அளவில் குடியகழ்வு வரியொன்று அறவிடும் ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை அமுல்படுத்துவதற்கான திட்டமொன்று அமுல்படுத்தப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது எந்த வருமானமும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 செப்தெம்பர் 18 ஆந் திகதி மரணமடைந்த பெண் உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 191,514 தொகையான ஆதனக் கடன் மீதிக்காக அக்ரஹார கடன் சுரக்கும் காப்புறுதி மேவுகை வழங்கப்பட்டிருந்த போதிலும், அக் கடன் தொகை தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவையை விட்டுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 355,420 கடன் மீதி தொடர்பாக திணைக்களம் போதியவான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1999 ஆம் ஆண்டின் போது சேவையை விட்டுச் சென்ற ஊழியரிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 252,045 தொகையான ஆதனக் கடன் தொகையை அவர் சேவையில் இருக்கும் போதே தனது பெயருக்கு காணியின் உரித்துறுதியை எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையினால் அக்கடனை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 20 வருடங்களை விஞ்சிய ரூபா 230,534 தொகையான நிலுவைக் கடன் மீதி தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**வருடாந்த பெறுகைகள் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதியான 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 2015 இன் வருடாந்த பெறுகைகள் திட்டத்தின் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. அதற்கு மேலதிகமாக, பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) வழிகாட்டியின் பிரகாரம் விரிவான பெறுகைகள் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) விளைவற்ற சொத்துக்கள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| டிரான்ஸ்போமர் இயந்திரம் | 02 | 2009 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 13 ஆந் திகதி வரை (உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடம் நவீனமயப்படுத்தும் போது வழங்கப்பட்டிருந்தது) |
| சீ.சீ.ரீ.வீ.கெமரா | 70 | 2010 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 13 வரை (உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடம் நவீனமயப்படுத்தும் போது கட்டிடத்தின் கூரைக்கு பொருத்தப்பட்டிருந்த போதிலும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை) |

(ஆ) பெறவேண்டிய மீதி

அரச கூட்டுத்தாபனத்திற்குரிய காணியில் 100 பேர்ச் காணிப்பகுதியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கையேற்பதற்காக 2008 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 50 மில்லியன் முற்பணமாக அக்கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

எனினும் பின்னர் அந்த ஆதனம் கையேற்றல் கைவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்ட முற்பணம் மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் ஒன்பது மாடிகளையுடைய மோட்டார் வாகன தளத்தை நிர்மாணித்தல் என்பவற்றுக்காக மதிப்பிடப்பட்ட ரூபா 1,437 மில்லியனில் அரசாங்க கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,318 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அந்த நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அரச கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டு 06 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அத்திகதியில் அந்த நிர்மாணங்களின் செயல்முன்னேற்றம் 80 சதவீதமாக இருந்தது.

### 3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

வரி செலுத்துவர்களுக்காக விடுவிப்புச் சான்றிதழ் விநியோகிப்பதற்காக திணைக்களத்திற்கு அந்த வரி செலுத்துவர்களிடமிருந்து அறவிடுவதற்கான நிலுவை வரி இல்லாதிருக்க வேண்டும். எனினும் வரி கோவைகளுக்குரிய 2015 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரி விடுவிப்புச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் வரியிறுப்பாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவை வரி மீதி ரூபா 132.33 மில்லியனாக இருந்தது. மேலும், அந்த நிலுவை வரி 2016 மார்ச் 21 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தித் தீர்ப்பதற்காக மாதாந்தக் கொடுப்பனவு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 113.83 மில்லியன் மேலும் அறவிடப்படவேண்டியிருந்தது.

### 3.9 முகாமைத்தவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் இதுவரை காணப்பட்ட பெறுமதிசேர் வரி அறவிடக்கூடிய எல்லையான காலாண்டிற்கு ரூபா 3 மில்லியன் அல்லது வருடமொன்றிற்கு ரூபா 12 மில்லியன் தொகை 2013 ஜனவரி 01 ஆந் திகதி முதல் காலாண்டிற்கு ரூபா 3.75 மில்லியன் அல்லது வருடமொன்றிற்கு ரூபா 15 மில்லியன் வரை உயர்த்தப்பட்டிருந்தது. இந்த வரி எல்லை உயர்த்தப்பட்டவுடன் 17,000 வரியிறுப்பாளர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் வரிசெலுத்துவதிலிருந்து நீக்குவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களம் நடவடிக்கை எடுத்து வரிக் கோவைகளை தற்காலிகமாக செயலிழப்புச் செய்திருந்தது. அந்த வரியிறுப்பாளர்களின் பதிவினை இரத்துச் செய்து அது வரையில் வழங்கப்பட்ட பெறுமதிசேர் வரி பதிவுச் சான்றிதழை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் அவ்வாறு செயலிழப்புச் செய்யப்பட்ட 54 வரியிறுப்பாளர்களுக்கு அரசாங்க நிறுவனங்களில் இருந்து ரூபா 175.09 மில்லியன் தொகையான பெறுமதிசேர் வரி சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், வரி அறிக்கை சமர்ப்பித்தலோ அல்லது திணைக்களத்திற்கு வரித்தொகையை அனுப்புதலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான வரியிறுப்பாளர்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் திணைக்களம் சேகரித்த வருமானத்தில் [இலங்கை சுங்கத் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட இறக்குமதி அடிப்படையிலான பெறுமதி சேர் வரி (இறக்குமதி) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (இறக்குமதி) வருமானம் தவிர] 97 சதவீதம் தலைமை

அலுவலகத்தினாலும், 3 சதவீதம் பிரதேச அலுவலகங்களினாலும் சேகரிக்கப்பட்டிருந்தன. எனினும், உள்நாட்டு இறைவரிச் சேவையில் உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது மீளாய்வாண்டில் மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் 52 சதவீதம் தலைமை அலுவலகத்திற்காகவும் 48 சதவீதம் பிரதேச அலுவலகத்திற்காகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே முன்னைய ஆண்டின் போது முறையே 59 சதவீதம் மற்றும் 41 சதவீதம் என உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **விபரம்** | **2015** | | **2014** | |
|---|---|---|---|---|
| | **தலைமை அலுவலகம்** | **பிரதேச அலுவலகம்** | **தலைமை அலுவலகம்** | **பிரதேச அலுவலகம்** |
| தேறிய வருமான சேகரித்தல் ரூபா. மில்லியன் | 410,971 | 14,243 | 354,853 | 12,165 |
| சதவீதம் | 97 | 03 | 97 | 03 |
| **உள்நாட்டு இறைவரிச் சேவையின் உத்தியோகத்தர்களை நியமித்தல்** | | | | |
| - எண்ணிக்கை | 450 | 409 | 558 | 392 |
| - சதவீதம் | 52 | 48 | 59 | 41 |

மேற்கூறப்பட்ட விபரங்களின் பிரகாரம் வருமான சேகரித்தலை மேம்படுத்தும் வகையில் உத்தியோகத்தர்கள் தலைமை அலுவலகத்திற்கும் பிரதேச அலுவலகங்களுக்கும் நியமிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) வரிக்கோவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வரிக்கோவையொன்றின் 2009/2010 மதிப்பீட்டு ஆண்டு முதல் 2012/2013 மதிப்பீட்டு ஆண்டு வரையான 04 மதிப்பீட்டு வருடங்களின் வரி அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட புரள்வுகள் ஒன்றுகொன்று வித்தியாசமான பெறுமதியைக் கொண்டிருந்தன. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **மதிப்பீட்டு வருடம்** | **புரள்வு** | | | |
|---|---|---|---|---|
| | **நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்** | **VAT அறிக்கைகளின் பிரகாரம்** | **NBT அறிக்கைகளின் பிரகாரம்** | **ESC அறிக்கையின் பிரகாரம்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 2009/2010 | 1,231,860,939 | 1,272,942,632 | 1,023,942,936 | 1,334,820,418 |
| 2010/2011 | 1,753,586,250 | 1,896,388,595 | 632,099,234 | 1,896,388,636 |
| 2011/2012 | 1,256,996,011 | 1,020,386,941 | 703,262,647 | 299,676,887 |
| 2012/2013 | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 965,039,314 | 659,872,084 | 1,058,403,149 |

மேலும் 2009/2010 மதிப்பீட்டு ஆண்டு முதல் 2012/2013 மதிப்பீட்டு ஆண்டு வரையான 04 வருடங்களின் சுங்க அறிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் தொகை மற்றும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட வரித்தொகை என்பவற்றுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| மதிப்பீட்டு வருடம் | சுங்க அறிக்கையின் பிரகாரம் இறக்குமதி பொருட்களின் அடிப்படையில் செலுத்தப்பட்ட தேசத்தைக்கட்டியெழுப்பும் வரி | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள இறக்குமதி பொருட்களின் அடிப்படையில் செலுத்தப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித் தொகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2019/2010 | 35,247,968 | 26,568,881 |
| 2010/2011 | 28,081,710 | 21,562,530 |
| 2011/2012 | 16,403,767 | அறிக்கையிடப்படவில்லை. |
| 2012/2013 | 14,047,925 | நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

மேற்கூறப்பட்ட இணக்கமின்மையின் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு மேலதிக வரி அறவிடும் இயலுமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) வரிக்கோவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 03 வரிக் கோவைகளுக்குரிய வியாபாரப் புரள்வு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கீழே காண்பிக்கப்படுகின்ற பிரகாரம் வரி வருமானம் ரூபா 649,395,374 இனால் குறைவாகக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| | காலப்பகுதி | வரி வகை | அறவிடவேண்டிய மேலதிக வரித்தொகை |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | 2012/2013 | பெறுமதி சேர் வரி | 158,236,010 |
| | | வருமான வரி | 78,630,575 |
| | | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 21,892,804 |
| | 2013/2014 | வருமான வரி | 96,946,239 |
| | | பெறுமதி சேர் வரி | 211,837,034 |
| | | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 24,317,162 |
| (ii) | 2009/2010 | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 5,782,969 |
| | | பெறுமதி சேர் வரி | 36,150,781 |
| | | பொருளாதார சேவைக் கட்டணம் | 4,003,497 |
| (iii) | 2012/2013 | வருமான வரி | 11,598,303 |
| | | **மொத்தம்** | **649,395,374** |

## 3.10 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1,249 | 1,214 | 35 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 30 | 29 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,058 | 895 | 163 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 409 | 387 | 22 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 2,746 | 2,527 | 221 | 02 |